ஸ்ரீ:
ஸ்ரீகோதாயை நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

ஸ்ரீ உ வே உருப்பட்டுர் ஸௌந்தரராஜசார்யரின் திருப்பாவை பாசுரங்களுக்கு உண்டான ஸ்வாபதேசம் என்பது கற்கண்டாய் இனிக்கின்றது. அதிலும் விஶேஷமாக இன்றைய "ஆழிமழைக்கண்ணா" பாசுரத்திற்கு அளித்துள்ள ஸ்வாபதேசம் என்பது கிடைத்தற்கரிய பொக்கிஷம்.

ஸ்வாமி தேஶிகன் மாதாந்த்ரஸ்தரிடம் வாதிடும்போது ஸ்ரீஆளவந்தார் ஸூக்திகளைக் கையாண்டார் என்பது சரித்திரம். ஸ்ரீஆளவந்தார் அடங்கிய குருபரம்பரையே இந்த பாசுரத்தின் உள்ளார்த்தம் என்றொரு பூர்வமான தத்துவத்தை வெளிக்காட்டியது பெருமைக்குரியது.

இதர தேவதா ஸம்பந்தம் பற்றி பேசும்போதும் நாசூக்காக அனைவரும் எம்பெருமானுக்கு அடியவர் என்பதை காட்டியது அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய தத்துவம். அதனை ஒரு எளிய கற்பனையனுபவமாக அருளியது மிகவும் மெச்சத்தக்கது.

ப்ரபத்தி அனுஷ்டித்த ஒருவனை யமகிங்கரர்கள் நெருங்கும் அதிகாரம் இல்லை. யமகிங்கரர்கள் தலைமேலேறி பரமபதம் எய்தும் மேன்மை ப்ரபந்நனுக்கு இருக்கிறது என்றவாறாக ஸ்வாமி தேஶிகன் அருளியுள்ளது அனைவரும் அறிந்ததே. இப்படியாக, பரமைகாந்தியான ஸ்ரீவைஷ்ணவன் ஒருவன் வீதியில் நடக்கும்போது எப்படி இதர தேவதைகளும், அந்த ப்ரபந்நனை எம்பெருமான் ஸ்வரூபமாகக் கண்டு வணங்குவர் என்பதை ஆனித்தரமாக விளக்கியிருப்பது அனைவருக்கும் ஒரு ஜ்ஞாநத்தை அளிக்கும்.

"ஆழிமழைக்கண்ணா" என்ற பதம் ஸ்வாசார்யர் முதல் ஸ்வாமி தேஶிகன், ஸ்ரீபாஷ்யகாரர் முகமாக எம்பெருமான் வரையுள்ள ஆசார்யர்களைக் குறிக்கிறது என்பதையும், அந்த அனைத்து ஆசார்யர்களும் மாதம் மும்மாரிபோல் பொழிய வேண்டும் என்பதையும், அவர்கள் பொழிய வேண்டியதான மழையானது வேதங்கள், உபநிஷத்துக்கள், ப்ரபந்தங்கள், ஸூக்திகள், ரஹஸ்ய க்ரந்தங்கள் என்பதான வ்யாக்யானம் அனுபவிக்க வேண்டிய ஒன்று.

மேகங்கள் உலகம் வாழ்வதற்காக பொழிவது போன்று ஆசார்யர்கள் உலகம் நடப்பதற்காக, உலகம் தன் கர்மாக்களை சரிவர செய்ய வேண்டுமாய் பெய்யும் வர்ஷங்கள் என்பது ஒரு ஆழ்ந்த தத்துவம்.

பகவத் ராமானுஜர் என்ற ஏரி ஜ்ஞானத்தால் நிரம்பி வழிய, 74 மதகுகள் (சிம்மாசனாதிபதிகள்) மூலமாக ஜ்ஞானத்தை வெளிப்பாய்ச்சியதும், அந்த ஜ்ஞானமானது ஆசார்யர்கள் என்ற நதிகள் மூலமாக கடலெனும் எம்பெருமானை அடைய வழிவகை செய்வதும் உள்ளபூர்வமாக அனுபவிக்க வேணும் என்ற தத்துவம் உமது உபன்யாஸ உபதேசத்தில் கிடைக்கிறது.

இன்றைய உபன்யாஸமானது பழமையும் புதுமையும் கலந்ததும், ஜ்ஞானிகளும் ஸாதாரணர்களும் எளிதாக புரிந்துக்கொள்வதன்றியும், ஆசார்யர் வழி நடக்கச்செய்தேயும், எளிய மார்க்கமான ப்ரபத்தியை அவஶ்யம் அனுஷ்டிக்க வேண்டிய தத்துவத்தையும் போதிக்கின்றது.

தாஸன், புலிக்குன்றம் வங்கீபுரம் ஜகந்நாதன்.